உ

சிவமயம்.

ஆராய்ச்சி இலக்கம் VIII

அஃதாவது

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

எழுதியிருக்கின்ற

சைவ சித்தாந்த வரலாறு

என்னும்

விஷயத்தைக் குறித்தது.

ஆராய்ச்சி இலக்கம் VII

அச்சிலிருந்துகொண்டிருக்கிறது.

திருச்சிராப்பள்ளி

திரு. மா. சாம்பசிவம் பிள்ளை

எழுதியது.

குரோதன ஞ ஐப்பசி மீ] [விலை அணா 2

உ

சிவமயம்.

ஆராய்ச்சி இலக்கம் VIII.

சைவசித்தாந்த உண்மைப் பேரறிவாளர்கட்கு ஓர் விண்ணப்பம்.

சென்னையிற் பிரசுரமாகிவருஞ் செந்தமிழ்ச் செல்வி யென்னும் பத்திரிகையின் உ-வது சிலம்பின் க-முதல் கஉ-வரை பக்கங்களினும், ருக-முதல் ருரு-வரை பக்கங்களினும், ௱க-முதல் ௱ரு-வது பக்கங்கள் வரையினும், சைவசித்தாந்த வரலாறு எனுமோர் உரை, திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களா லெழுதப்பட்டுளது. பிரமாண ஆதரவு சற்று மில்லாத வெற்று மொழிகளடங்கிய பல விஷயங்கள் அதிற் காணப்படுகின்றன. அவைகளிற் சிலவற்றை ஈண்டு ஆராய்வோம்.

சைவ சித்தாந்தம் தமிழரது மார்க்கமாகக் கூறப்பட்டுளது. சைவசித்தாந்தம் போதிக்கும் மெய்கண்ட சாத்திரம் பதினான்கிலும் பண்டார சாத்திரம் பதினான்கிலும் இவ்வாறு கூறியிருக்கவில்லை. "இக்கிரமத்தென்னுமிருக்கு" எனச் சிவஞானபோதத்தினும், "வேத நூல் சைவ நூலென்றிரண்டே நூல்கள், வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்" எனச் சித்தியாரினும், "மற்றவற்றின் ஒரு வினைக்கோர் வினையால் வீடு வைதிக சைவம் பகரும்" "வேதத்தலை பொருளாய்" எனச் சிவப்பிரகாசத்திலும், முறையே மெய்கண்டார், அருணந்தி சிவனார், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சைவசித்தாந்த நூலாசிரியர்கள் மூவரும் அருளிச் செய்திருக்கின்றார்கள். இம்மூன்று தமிழ் நூல்களுமே, சைவ சித்தாந்தத்தை விரித்துக்கூறும் அரிய பிரபல நூல்கள்—சைவ சித்தாந்த அனு

பூதிமான்களும் நடராஜப் பிரபு அருள்பெற்றவர்களுமாகிய ஸ்ரீ சேக்கிழார் மூர்த்தியும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளும் அவர்களியற்றிய திருத்தொண்டர் புராணத்திலும், பண்டார மும்மணிக் கோவையிலும் முறையே, வேதப் பயனுஞ் சைவம் என்றும் "ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த வாராவின் பவ ருங்கனிபிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தம்" எனவும் கூறியிருக்கின்றார்கள்.

மேலே காட்டிய அருளுரைகளில் காணப்படும் வேதம் என்னும் நூல் எப்பாடையிலுள்ளதென ஆராயப்புகின், அது ஆரிய பாடையிலேயே உள்ளதென மெய்கண்ட தேவரது முதன் மாணாக்கராகிய சகலாகம பண்டிதரென்னுங் காரணப் பெயர்பூண்ட அருணந்தி சிவாசாரியாரியற்றிய சிவஞான சித்தியாரின் "ஆரியமா யறம்பொருளோ டின்பம் வீடெல்லா மறைந்துயிர்கட் கறிவு செயலளிப்பது நூல்" என்ற செய்யுளே நன்கு காட்டும். இன்னமுஞ் "செந்தமிழி லின்பமிறு வாய லது செப்பார். அந்தமு மாதியு மிலா னுரையை யாய்ந்தார்" என்னும் உபாகமமாகிய சிவதரு மோத்தரச் செய்யுளாலும், தன்மமாதிய மூன்றொழிந்த வீட்டு நெறி மார்க்கம் முற்காலத்தில் தமிழிலிருந்ததில்லை யென்பதும் வெளிப்படும். திருக்குறள் சிறப்புப்பாயிரங்களில் ஒன்றில், "ஆரியம் வேதமுடைத்து" எனவுஞ் சங்கப் புலவோர் கூறியுமுள்ளார்—மெய்கண்ட தேவரியற்றிய பன்னிரண்டு சூத்திரங்களடங்கிய தமிழ் நூலுக்குச் சிவஞானபோதமெனும் பெயர் மெய்கண்ட தேவரால் இடப்பட்டதென அந்நூல் கூறவில்லை.—மற்றெவ்வாறெனில், அவர் மாணாக்கர் அருணந்தி சிவம் இயற்றிய அந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் "உயர் சிவஞான போதமுரைத்தோன்" எனக் கூறினமையி னென்பதாலுணரவேண்டும். அருணந்தி சிவமும் சிவஞானபோதமெனப் பெயரிடுவதற்குக் காரண மென்னை யெனின், வடமொழிச் சிவஞானபோதம் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் அந்நூலுக்குப் பெயர் சிவஞானபோதமெனக் காணப் படுவதைக்கொண்டு அச்சூத்திரங்களைத் தமிழாக வகுத்த நூலுக்கும் முதனூற் பெயரையே யிட்டனரென்பது தெள்ளிதாய் விளங்கும்.

திருவாவடுதுறை யென்னுஞ் சைவ ஆதீனம் மெய்கண்ட பரம்பரையைச் சார்ந்தது. பரம்பரை யென்பதென்னவெனின், பாட்டன் சொன்னதைக் கேட்டபடி தகப்பன் சொன்னது, தகப்பன் சொன்னதைக் கேட்டபடி பிள்ளை சொன்னது, பிள்ளை சொன்னதைக் கேட்டபடி அவன் பிள்ளை சொல்வது :— இதுபோன்றதே குரும்பரையிலும். ஆதி ஆசாரியர் அவர் சீடனுக்கும், அச்சீடர் இவர் சீடனுக்கும் வரன்முறையாக ஒரு பொருளை ஆதிதொட்டே இன்னதெனக் கூறி வருவதாகும். அவ்வாறே மெய்கண்ட சந்தானத் திருவாவடுதுறை ஆதீனத்து முதற் குரவர் ஸ்ரீமத் நமசிவாயமூர்த்திகள் காலம் முதல் இதுகாறும் (அதாவது சென்ற நிளா வருடங்களாகத்) தமிழ்ச்சிவஞானபோதம் வடமொழிச் சிவஞானபோதத்தின் மொழி பெயர்ப்பே யெனக் கொள்ளப்பட்டு வருகின்றது. சிவஞான போதத்திற்குப் புடைநூல் செய்த ஆசிரியராகிய உமாபதி சிவம் அருளிச்செய்த பௌஷ்கர ஆகம வியாக்கியானத்தில் பசு படலத்தில், வடமொழிச் சிவஞான போதம் இரண்டாஞ் சூத்திரத்தை யெடுத்து உதகரித்திருக்கின்றார்கள். பௌஷ்கர வியாக்கியானம் கஅகூ-ம் பக்கத்தை பார்க்க—திருவாவடுதுறை ஆதீனம் இரண்டாம் பட்டம் ஸ்ரீமத் அம்பலவாண தேசிகர் காலத்தில் அவரனுக்கிரகம் பெற்ற மாணாக்கர், உலகுடை நாயனார் அருளிச்செய்த கழிநெடில் விருத்தத்தில் "முந்து மாகமத்தை யருட்டுறையண்ணல் மொழி பெயர்த்துரைத்த நூன்முதலா" வெனவுங் கூறியுள்ளார். சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீமத் சிவாக்கிர யோகிகள் சுமார் சா வருடங்கட்கு முன் இயற்றிய சிவஞானபோத பாஷ்யத்தில் "ரௌரவதந்திராந்தர்கதம் சிவஞான போதாக்கியம் சாஸ்திரம்" அதாவது இரௌவதந்திரத்துள்ளே அடங்கியது சிவஞானபோதமெனப் பெயரிய சாஸ்திரம், என வெழுதியிருக்கின்றார்கள். இம் மூர்த்திகட்குச் சுமார் க00 ஆண்டுகட்கு முந்தின அவ்வாதீனத்துப் பூர்வாசிரியர் சதாசிவ சிவாசாரியர் காளத்தித்தலத்தி லெழுந்தருளியிருந்து, அருளிச்செய்த சிவஞானபோத வியாக்கியையிலும் அவ்வாறே கூறியிருக்கின்றார்கள். தமிழ்ச் சிவஞான போதத்திற்கு விருத்தியுரை செய்த பாண்டிப்பெருமாள்

என்னும் பூர்வீக உரையாசிரியர் கொள்கையுமிதுவே. பாடிய மியற்றிய மாதவச் சிவஞான முனிவரும் மொழி பெயர்ப்பு என்பதை ஒவ்வொரு சூத்திரத்துங் காட்டி வற்புறுத்திக் கூறி யிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிலுள்ள மற்றைய சைவ ஆதீன பரம்பரைக் கொள்கையுமிதுவே. அதுபோலவே புலவர் திலகர்களாய் விளங்கிச் சைவ நூல்களியற்றிய சைவ சித்தாந்தக் கொள்கை பூண்ட நம்பெருமக்கள் எல்லோரும் ஒரே மொழியாய்த் தமிழ்ச் சிவஞான போதம் வடமொழியின் மொழி பெயர்ப்பே யென விறுதி கட்டியுள்ளார்கள். விரிக்கிற்பெருகும் இவ்வரிய பிரபல பிரமாணங்கட்கெல்லாம் முரண்படச் சைவ சித்தாந்தம் தமிழர் மதமெனக் கூறுவது ஒருவித பிரமாணத்தாலும் ஆதரவு செய்யப்படாத வெற்றுரையேயாம்.

சிவ, என்பது தமிழ்ச் சொல்லென்றும் ஆரிய பாஷைகளுள் சகரம் ஆதியிற் கிடையாதென்று பாஷா தத்துவ விற்பனர் கூறுகின்றார் எனவும் நண்பர் எழுதியிருக்கின்றார். அவ் விற்பனர் யாரோ, அவர் கூற்றுக்குப் பிரமாணந்தான் யாதோ, அறியகில்லேம். இருமொழிக்கும் கண்ணுதலாரே முதற்குரவரெனச் சைவ நூல்கள் சாற்றும். தமிழை அகத்தியர்க்கு அறிவுறுத்தியவரும் அவரே. தமிழ் முதலிலக்கணஞ் செய்தவரும் அகத்தியரே. இவர் முதன் மாணக்கர் தொல்காப்பியனாரியற்றிய தொல்காப்பியமென்னுந் தமிழிலக்கண நூலே இதுகாறுந் தமிழ் நாட்டில் நடைபெற்று வந்துகொண்டிருக்கின்றது. அந்நூலை யனுசரித்தே மற்றைய தமிழ் இலக்கண நூல்களும் காலக்கிரமத்தே தோன்றியுள்ளன. அந்நூல்களிலெல்லாம் தமிழ்ப் பாடையின் எழுத்துக்களின் சங்கியைகளையும், (அவ்வெழுத்துக்கள் மனிதர் உடம்பினின்று) பிறக்குமிடங்களையும் தமிழ்ப் பாஷையில் வடமொழி எழுத்துக்களும், மொழிகளுஞ் சம்பந்தப்படுமென்றும் கூறியிருக்கின்றார்கள். இவ்விலக்கண நூல்களாற் றெரிவதைக் காட்டுதும். தமிழ்ப் பாஷையில் உயிரெழுத்துப் பன்னிரண்டு அ-ம் முதல் ஒள ஈறாக. மெய்யெழுத்து ௧௮ என்பதே. ககரம் முதலாக னகர மீறாகவுள்ள பதினெட்டெழுத்துக்கள்தான் மெய்யெழுத்துக்கள். அவற்றுள் ற ன ழ எ ஒ இவ்வைந்தெழுத்துமே தமி

ழீற்குரிய சிறப்பெழுத்தா மென்பதே. இவற்றில் சகரவர்க்கஞ் சேரவில்லை. மீண்டும் மெய் யெழுத்துக்கள் பதினெட்டில் க ச ட த ப ற வென்பன ஆறும் வல்லினம். வன்மையாக உச்சரிப்பதனல் வல்லினமெனப் பெயர் பெற்றன. சிவம் என்ற மந்திரத்திலுள்ள முதலெழுத்து வன்மையாக உச்சரிக்கப்படும் சிகரமல்ல. வல்லின எழுத்துக்களில் இரண்டாவதாகக் காணப்படும் சகரவெழுத்து இடைநா, மேல்வாயிடையாய்ப் பிறப்பது எனத் தமிழ் இலக்கண நூல் கூறும். வேறுவகையாய் மெலித்தோ வலித்தோ உச்சரிக்கப்படுமெழுத்துகளைத் தமிழ்ப்பாஷை கொண்டில. அதனலன்றோ, மனிததேகத்தின் உறுப்புகட்கு எவ்வித பிரயாசையுங் கொடாது இயற்கையாய் மொழியக்கூடிய நமது மொழிக்கு இனிமையென்னும் பொருள்படும் தமிழ் என்னும் பெயரை இறைவனீந்தனன். இதற்காக நாம் பெரிது மிறுமாப்படையவேண்டும். வடமொழி மெய்யெழுத்துக்களிலுள்ள ஶ ஷ ஸ என்ற மூவெழுத்துக்களும் தமிழ்ப் பாஷையில் இல்லை. இவைகளில் முதலெழுத்தாகிய ஶ வர்க்கத்தைச்சார்ந்த ஶி என்ற வெழுத்துத்தான் ஶிவ என்னும் மந்திரத்தின் முதலெழுத்து. இவ்வடமொழியெழுத்து, தமிழ் சகரவெழுத்துப் பிறக்கும் முயற்சியாற் பிறப்பதன்று. வடமொழி மெய்யெழுத்துக்களில் முப்பதாமெழுத்தாகிய ஶ வென்னும் எழுத்துத் தமிழில் சகரவெழுத்தாக விகாரப்படுமென்ற தமிழ் இலக்கண விதிப்படி ஶிவ என்னும் மந்திரத்தின் முதலெழுத்து சிகரமாய்த்திரிந்து சிவவெனத் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வருகின்றது. நன்னூல் எழுத்ததிகாரம். கசஎ-ம் சூத்திரத்தைப் பார்க்க. தமிழ் இலக்கண விதிக்கு மாறுபாடாகக் கூறி நஞ் செந்தமிழ்ப் பாஷையை இலக்கண வரம்பிலா மொழியாக ஆக்கிக் கூறும் பாஷாவிற்பன்னர் கூற்று ஆதரிப்பதற்கில்லை. "வேத நான்கினு மெய்ப்பொருளாவது நாதனும நமச்சிவாயவே" என, அதாவது நான்கு வேதங்களினும் ஶிவ மந்திரமே உண்மைப் பொருளாயுள்ளதெனத் தமிழ் மறையே கூறுமானல் இவ்வருஞரையை மறுத்துக் கூறுபவர் சைவராகார் என்பதே திண்ணம். வேதம் ஆரியத்திலேயே உள்ளதென்பதை மேலே காட்டினம்.

திருப்பரங்கிரிப் புராணத்தில் குமரன் உபதேசச் சருக்கத்தில் பஞ்சாட்சரம் இன்ன பாடை எழுத்துக்களெனக் கூறுஞ்செய்யுள். "ஒருபா னென்பா னெழுத்து மிசையுறு மவ்வெழுத்து மெண் மூன்று, மருவுமெழுத்து மிசையெழுத்தும் வளருமிருபத்தொன்பதின்மேற், செருதுமெழுத்தையிகா மெனச் செப்புமெழுத்தும் நாலேழ்மேல், பொருவு மெழுத்தி னெட்டெழுத்து மையைந்ததன்மேற் பொருவுமெழுத்து."

வடமொழி மெய்யெழுத்துக்களில் பத்தொன்பதாவது எழுத்துக்கு மேற்பட்டது ந. இருபத்து நாலெழுத்துக்கு மேலுள்ளது, ம. இகரஞ்சேர்ந்த முப்பதாமெழுத்து ஶி. இருபத்தொன்பதாமெழுத்தின் நெட்டெழுத்து, வா. இருபத்தாறுமெழுத்து ய. இவ்வாறு வடமொழி யெழுத்துக்களாலாயது பஞ்சாக்கரமென நமது முருகக்கடவுள் கூறியிருப்பதையுங் காண்க.

தமிழ்ப் பாடையின் இலக்கண இலக்கியங்களிற்றேர்ச்சியடைந்து பல தமிழ் நூல்களையியற்றியவரும் தமிழிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் பேரபிமானம்பூண்டவரும், நமது திருவாசகத்தை நன்குமதித்து ஆங்கில பாஷையில் ஆங்கிலச் செய்யுள்வடிவாக மொழிபெயர்த்த சமர்த்தரும் உலகமுற்றுஞ் சஞ்சரித்து ஏனைப்பாடைகளினும் வல்லுனருமாகிய ரெவரண்டு ஜி. யு. போப்பு என்னும் பட்சபாதமில்லாதவரும் நடுவு நிலைமையுடையவருமாகிய ஆங்கில நாட்டுக் கிறிஸ்து சமயப்பண்டிதர் சிவம் என்ற மொழி சமஸ்கிர்த அடியாகப் பிறந்ததெனக் கூறியிருப்பதை அவரது ஆங்கில மொழி பெயர்ப்புத்திருவாசகப் புத்தகத்தின் III-வது பாகத்திற் கண்டுணர்க. இதுகாறுங் காட்டியவற்ருல் சிவம் என்னும் மொழி வடமொழியே யெனக் காட்டப்பட்டது.

"நூலே கரகம் முக்கோல்மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய" வென்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற் காணப்படும் நூல் என்ற மொழி ஏடு எனவும் அந்தணர் என்றமொழித் துறவிகளைக்குறித்த தெனவும் நண்பர் எழுதியிருக்கின்ருர். சைவசித்தாந்த வரலாறு எழுதுவதில் இச்சூத்திரம் இடம் பெறவேண்டுவதில்லை. ஏனென்ருல் தொல்காப்பியஞ் சமய

நூலல்ல. அது இலக்கணநூல். "இருக்கும் எசுரும் சாமமும் அதர்வமுந்தலையாய வோத்து" என நச்சினார்க்கினியர் உரைப்பகுதியிலெழுதியிருப்பதுமன்றி, "எழுத்துஞ் சொல்லு மாராய்ந்து இம்மைப்பயன்றருதலின் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களும் இடையாய ஒத்தாமென்றுணர்க" என்று மெழுதியிருக்கின்றார். தமிழர்கள் தெய்வம் கந்தழி, வள்ளி, கொடிநிலையென அந்நூலிற் காணப்படுகின்றது. தொல்காப்பியச் சூத்திரங்களின் சில பகுதிகளால் சைவ சித்தாந்தம் தமிழரது என நண்பர் சாதிக்கப்புகுந்தார். சிவம் என்ற சப்தமே தொல்காப்பியத்தில் இல்லை யென்றால் சைவ சித்தாந்தவரலாறு அந்நூலில் எவ்வாறு காணக்கூடும். தமது நவீனக் கொள்கைக்குத் தமிழ்ப்பெரு இலக்கண நூலிலும் ஓாதரவு இருப்பதுபோற் பிறருக்குக் காட்டவேண்டி ஏதேதோ வெழுதியிருக்கின்றார் என்று தமிழ்ப் பண்டிதர்கள் நன்கு அறிவார்கள். நூல் என்ற மொழிக்கு ஏடு என்று நண்பரது கொள்கைப்படி பொருள்கொள்வோமானால், அந்தணர் தாம், அவர்களிலும் துறவிகள் தாம், ஏடுவைத்துக்கொண்டு படிப்பவர்போலும். அரையர், வைசிகர், வேளாளர் ஏட்டைத் தொடாமலும் கல்வி கற்காமலு மிருக்கவேண்டும்போலும். ஈதென்னவோர் பெருநகைப்புக்கிடமாயிருக்கிறதென்று கல்வியாளர்கள் பழியாதிரார். நூல் என்ற மொழிக்கு முந்நூலென்றே உச்சிமேல் வைத்துத்துதிக்கும் நச்சினார்க்கினியர் பொருள் கண்டார். மேற்குறித்த சூத்திரமும் அதற்கடுத்த சூத்திரங்களும், பொதுவகையில் அந்தணர், அரையர், வைசியர், வேளாளர் இவர்கள் மரபை அவரவர்கள் அடையாளங்களோடு உணர்த்த வெழுந்தனவேயாம். இல்லறத்தார், துறவறத்தார் என்ற ஆசிரமபேதங்களைச் சொல்ல எழுந்தனவல்ல. முதற் சூத்திரத்திற் கண்ட அந்தணர், துறவிகளைக் குறிக்குமானால் அடுத்த சூத்திரங்களிற் குறிப்பிட்ட அரையரும், வைசியரும், வேளாளரும் துறவிகளைக் குறித்ததாக வேண்டும். சூ௫0, சூ௫௧, சூ௫௨-ம் சூத்திரங்களில் நான்கு சாதியாரும் பிறந்த ஊர் ஆதியனவும், அவர்கள் தலைமைக் குணம்படச் சொல்லுஞ்சொல்லும், இடைநின்ற இரண்டு சாதியாருமேயல்

லது மற்றவர் படைப்பகுதிபெறூர் என்றும், விரித்துக்கூறி யுள்ள இலக்கணங்களை நோக்குமிடத்து விவாத சூத்திரத்திற் கண்ட அந்தணர் என்ற பதம் துறவிகளைக் குறித்ததல்ல வென்பதே திண்ணம். துறவிகளைக் குறிப்பதானல் இந்நான்கு வகையாருள்ளும் இல்லறத்தாரில்லையோ? அவர்களை எச் சூத்திரங்கள் குறிப்பிடுகின்றன? இச்சூத்திரத்திற் கண்ட அடையாளங்களெல்லாம் மநுஸ்மிருதியில் அந்தணருக்குச் சொல்லும் அடையாளங்களாகவே விளங்குகின்றன. அறு வகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும் என்ற சூத்திரத்தில் ' நாலிரு வழக்கிற்றாபதர்பக்கமும்'' என்றபகுதியே துறவிகளைப் பற்றித் தொல்காப்பியநூல் கூறியுள்ளது. அப்பகுதிக்கு உரையாசிரி யர் எழுதிய உரையில் "நீஇராடனிலக்கிடைகோடறோலுடுத்த றெல்லெரி யோம்பலூரடையாமை யுறுசடை புனைதல் காட்டி லுணவு கடவுட்பூசை பேற்றதவத்தினியல்பென மொழிப'' என்பனவாதிய துறவிகள் ஒழுக்கமும், அடையாளமுங் கூறுஞ் செய்யுட்களை உதாரணமாகக் காட்டியிருப்பதானும் நண்பர் கருத்துப்படி இங்குத்தான் துறவிகளுக்கில்லாத பூணூலைக் காட்டாதிருப்பதானும், இச்சூத்திரத்திற் கண்ட அந்தணர் என்றபதம் துறவிகளைக் குறியாதென்பதே தேற்றம். ஆதலால் துறவிகளைக் குறித்ததென்று கொண்ட பொருள் பிழை பட்டதே. பூணூல் அந்தணர்க்குரியதென்பது அந்தணர் கோலங்கொண்டு தமக்கு ஞானோபதேசஞ்செய்த ஆசாரியரை "மறையான் பெருந்துறையான் கொண்டபுரி நூலான்'' என மாணிக்கவாசக சுவாமிகள் தாமியற்றிய தமிழ்ச் சைவமறை யில் அருளியிருப்பதானும், சைவநூலாகிய திருத்தொண்டர் புராணத்தில் அந்தணர் குலத்தோராகிய குங்கிலியக் கலய நாயனுரை "அருமறை முந்நூல் மார்பினந்தணர்'' என்று கூறியிருப்பதானும், ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானுகிய அந் தணர்குலக் கொழுந்து "தோலொடு நூல் தாங்கினர்'' என்று பெரிய புராணத்தில் அருளியிருப்பதானும், சிவ பெருமானே அந்தணராதலால் அவரையும் "புரிநூறிகழ் மார்பினர்'' எனத் தமிழ்மறையில் புகழப்பட்டு இருப்பதானும், நன்கு விளங்கும்.

"நினைப்பதாகச் சிந்தை செல்லும்" என்ற திருவாசகச் செய்யுளைச் சிவவாக்கியர் பாடலென்றுங் கூறினர். இது அச்சுப் பிழையாயுமிருக்கலாம். ஆனால் வாசிக்கும் மாணவர்கள் மயங்குவார்களன்றோ?

விவாதச் சைவ சித்தாந்த வரலாற்றில் இன்னம் பலபெரும் பிழைகளுள. மற்றொரு சமயம் அவைகளை ஆராயப்புகுவோம். முடிபுரை—மேற்காட்டியவாறு, நமது பண்டைக்காலத்திய நூல்களின் பொருள்களைப் பிழைபடுமாறும் உரையாசிரியர்களின் மெய்யுரையை நீக்கிப் பிழைபட்ட உரையைப் புகுத்தியும், வேலியே பயிரைத்தின்னது, என்னற்போல, நம்மவர்களை எழுத முன்வந்தும் அவ்வாறெழுதிய வுரைகளை வாசித்துப் பரிட்சையில்தேரும் மாணவர்களுக்கும் பேதையர்க்கும் பரிசளிக்கவும் முன் வந்துமிருப்பார்களேயானுல் நமது பண்டைய நூல்களின் கதியும், நமது உண்மைச்சமயநெறியும், புறச்சமையத்தார் நமது சமையத்தை மிகவும் அலைக்கப்புகுந்த இக்காலத்தே என்னவாகுமோ? சைவ சித்தாந்த நன்னெறி யொழுகும் பெருமக்களே!! சைவ நூல் கற்கப்புகும் சைவ மாணவர்களே!! எமது ஆராய்ச்சியை ஓஞ்செய்யாமல் ஆராய்ந்து உண்மையைக் கடைப்பிடிப்பீர்களாக.

நம்மவர் பின்னுமெழுதியிருப்பதாவது "சுமார்த்தரும் "வைணவரும் தமது* மொழியினையும் தமது சமயநூலினையும் "அரசாங்கத்தாரும் சர்வகலாசங்கத்தாரும் மதித்துப்பேருதவி "செய்யும்வண்ணம் முயன்று வெற்றிபெற்றிருக்கின்றார்கள்". "சர்வகலா சங்கத்தார் வடமொழி வேதாந்த நூல் வல் "லார்க்குச் சிரோன்மணிப் பட்டங்கொடுப்பதாக ஏற்படுத்தி "யிருப்பதுபோல் சித்தாந்தப்புலமைப்பட்டங்கள் அமைக்க "வேண்டுமென்று நாம் அறிவிக்கவேண்டும்" என்பதே.

இது நிரம்ப சரியே. ஆனல் நம்மவரைப்போல் எந்த சுமார்த்தர் எந்த வைணவர் அவரவர்கள் பூர்வீக நூல்களின் மூலபாடங்களைத் திருத்தியும் நவீனத் தப்புவழிகளுண்டாக்கியும் வருகின்றார்கள். சைவசித்தாந்தவரலாற்றையே இவர் அடி

---

* தமிழ்நாட்டிலுள்ள வைணவருடையவும் சுமார்த்தருடையவும் மொழி தமிழே. ஆரியபாஷை பதினெட்டுப்பாஷை மக்களுக்கும் பொதுவே.

யோடு மாற்ற ஆரம்பித்தாரே!! தெய்வத்தன்மை பொருந்திய உரை ஆசிரியர் கண்ட மெய்யான பொருளைப்புறக்கணித்து அவரது பிழையுள்ளமார்க்கத்துக்கு இணங்க உரைகண்டாரே!!! இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகையில் அரசாங்கத்தாராவது சர்வகலாசங்கத்தாராவது மற்றுயாராவது யாதுசெய்வர். தமிழ் நூல்களின் பெயர்கள்கூடத் தெரியாமல் மங்கிப்போய் வெளிப் படாது மறைவாயிருந்து செல்லுக்கும் கறையானுக்கும் இரை யாயிருந்த பண்டைக்காலத்துச் சங்க நூல்களாதியான நூல் களைத் தமிழ்நாடு முற்றுந் தேடித்தேடிக் கண்டுபிடித்து ஏட்டுச் சுவடிகளில் எழுதியிருந்தவைகளை எக்காரணம்பற்றியும் ஓரஞ் செய்யாது உள்ளதை உள்ளபடியே அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழுலகர்க்கு உபகரித்த சுமார்த்தப் பிராமணோத்தமராகிய ஒரு சிறந்ததமிழ்க் கல்வியாளரை அரசாங்கத்தாரும் ஏனையோ ரும் எவ்வண்ணம் நன்குமதித்துப் பெருமை பாராட்டி மேலான பட்டமுமளித்துள்ளார்களென்பதை யெல்லோரு மறியவேண்டும்.

திருநான்மறை விளக்கமென்பதை நம்மவர் அவர் எழுதிய தற்கு மேற்கோளாகக் காட்டினார். அதுவும் இவர் எழுதியதே. அதுவும் பிழைமலிந்த ஓர் நவீனக்கொள்கையை நாட்ட முயன்ற வரலாறே. அதற்கும் யாம் ஓர் நீண்ட ஆராய்ச்சி இலக்கம் VII எழுதி முடித்து அது அச்சிலிருந்துகொண்டிருக்கின்றது. சீக்கிரம் வெளிப்படுமாறு சிவபெருமான் திருவருள்புரிவாராக.

“ பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டுய்கெனக்,
குடிலையென்னுந் தடவயனுப்பண், அருள்வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி,
வேதமென்னும் பாதவம் வளர்த்தனை, பாதவமதனிற்படுபயன் பலவே,
வீலைகொண்டு வந்தனர் பலரே யிலையொரீஇத், [அவற்று,
தளிர்கொண்டு வந்தனர்பலரே தளிரொரீஇ,
யரும்பொடு மலர் பிஞ்சென்றருங்கா யென்றிவை,
விரும்பினர்கொண்டு கொண்டுவந்தனர் பலரே, [பழுத்த,
யவ்வாறுறப்பு மிவ்வாறுபயப்ப, வோரும் வேதாந்தமென்றுச்சியிற்
வாராவின் பவருங் கனிபிழிந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத்,
தேன முதருந்தினர் சிலரே. (குமரகுருபரசுவாமிகள்).

சுபம். சுபம் சுபம்.

ஸ்ரீமெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

திருச்சிராப்பள்ளி,
14—10—25.

திரு. மா. சாம்பசிவம் பிள்ளை.